# புத்தளத்தில் பாதுகாப்பை பலப்படுத்த கோரிக்கை

(கொழும்பு)
புத்தளத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பாதுகாப்பை பலப்படுத்துமாறு முஸ்லிம் மத கலாசார இராஜாங்க அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை சேருநுவரப் பகுதியில் இடம்பெற்ற
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 31 இதழ் 93
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 14-5-1994

## ஜனாதிபதியின் நல்வாழ்வு திட்டம் குறித்து நிதி நிறுவனங்கள் கவலை

(மணிலா)
எதிர்வரும் தேர்தலைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க கடந்த மே மாதம் முதலாம் திகதி அறிவித்த நலவாழ்வுத் திட்டங்களை இட்டு உலகவங்கியும் சர்வதேச நிதி நிறுவனமும் கவலையடைந்துள்ளது என்று ஏ.எவ்.பி.
(4-ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் விவகாரம்: தொலைக்காட்சி விவாதத்திற்கு ஜெயலலிதாவிற்கு அழைப்பு

(சென்னை)
விடுதலைப்புலிகளுடன் தமிழக அரசு இரகசிய உறவு பூண்டுள்ளது. என்ற கூறியுள்ள புகார் குறித்து முதல்வர் ஜெய
(4-ம் பக்கம் பார்க்க)

# ★ அரசியல்வாதிகளின் பாதாள உலக ரகசியங்களை மூடிமறைப்பதற்கு முயற்சி

## சொத்தி உபாலியின் கைதுசந்தேகத்தை தருகிறது

(கொழும்பு)

குறிப்பிட்டசில அரசியல்வாதிகளின் திரைமறைவு வாழ்க்கையும், பாதாள உலக இரகசியங்களையும் மூடிமறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? சொத்தி உபாலி கைதானமுறை இந்த சந்தேகத்தை எழுப்பியுள்ளதாக பொலிஸ் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரபல்யம் வாய்ந்த தலைவர் பாதாள உலகத்தின் தலைவர்களும் ஒருவரான சொத்தி உபாலி நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டது தொடர்பாக பொலிஸ் திணைக்களத்தின் சில பிரிவுகளில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

பம்பலப்பிட்டி பொலிசாரின் தகவலின்படி சொத்தி உபாலி கட்டுஸ்தொடை பொலிசார் மூலம் ராகம வீதியில் வைத்து நேற்று முன் தினம் அதிகாலை 4-30 மணியளவில் கைது செய்யப்பட்டார்.
(4-ம் பக்கம் பார்க்க)

### பொலிஸ் விசாரணையில் அதிருப்தி!

(கொழும்பு)
சொத்தி உபாலிமீது பொலிசார் நடத்தி வரும் விசாரணை குறித்து பொலிசாரே அதிருப்தி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சொத்தி உபாலி பல்வேறு குற்றச் செயல்களுக்குப் பொறுப்பாக இருந்தாரெனத் தற்போது பல விதமான முறைப்பாடுகள் பொலிசாருக்குக் கிடைத்துள்ளனவாம்.

இதேவேளையில் நீர்கொழும்பு பொலிஸார் சொத்தி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் சொத்தி உபாலியை விசாரணை செய்துள்ளனர். இ-ம்

### சொத்தி உபாலி குழுவினரால் ஒன்பது பேர் படுகொலை

(கொழும்பு)
சித்தம அமரசிங்கவின் குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது பேர் சொத்தா உபாலியின் குழுவினரால் கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்ற வளவில் சொத்தி உபாலி சித்திக அமரசிங்க மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது தெரிந்ததே.

சம்பந்தப்பட்ட ஒன்பது பேரின் கொலை குறித்தும் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினர் பொலிசாருக்கு
(4-ம் பக்கம் பார்க்க

## கிழக்கில் சிவில் நிர்வாகம் ஒழுங்காக இயங்கவில்லை!

(மட்டுநகர்)
கிழக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகம் ஒழுங்காக இயங்குவதாக அரசு கூறிவருகிறது. ஆனால் மக்களின் தேவைகளை நிறைவேற்றும் திணைக்களங்களோ, அதிகாரசபைகளோ, கூட்டுத்தாபனங்களோ சீராக இயங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பல அலுவலகங்களில் தேவையான ஊழியர்கள் நியமிக்கப்படவில்லை. நியமிக்கப்பட்ட ஊழியர்களும் பாதுகாப்புக் காரணங்களுக்காக வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டனர்.

மட்டக்களப்பில் மட்டும் விவசாய திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கல்வி நாட்டுத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை போன்ற பல அரச அமைப்புக்களில் பெருமளவிலான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இதேபோன்று பாடசாலைகளி
(4-ம் பக்கம் பார்க்க)

### கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## யுத்தத்தினால் பிரச்சினைக்கு நீர்வுகாண முடியாது!

(கொழும்பு)
வடக்கின் கிழக்கு யுத்தமொன்றினால் தீர்வொன்றைக் காண முடியாது என்பது உண்மையே என்று லங்காதீப பத்திரிகை தெரிவித்துள்ளது.

மேற்படி பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஆயுதம் தாங்கும் பயங்கர
(4-ம் பக்கம் பார்க்க)

## சஜித்திற்கு பதவி வழங்க ஐ.தே.க.இளைஞர் அணி தயார்

(கொழும்பு)
சஜித் பிரேமதாசாவிற்கு ஐ.தே.க. கட்சியில் அமைப்பாளர் பதவியை வழங்கத் தயாராக இருக்கிறேன் என்று பலப்பிட்டி ஐ.தே.க. பிரதான அமைப்பாளரும் ஐ.தே.க. இளைஞர் அணியின் பொதுச் செயலாளருமான அசோக தனவம்ச தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாசாவிற்கு பதவி வழங்க விருப்பமானால் அவருக்கு சந்தர்ப்பம் கொடுப்பதற்காக நான் எந்நேரமும் அமைப்பாளர் பதவியை ராஜினாமா செய்யத் தயார் என்றும் அவர் கூறியுள்ளார்.

திவயின பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். ம

## தொண்டமானின் காவில் விழாத ஜனாதிபதி

(கொழும்பு)
தொண்டமானின் பாதத்துக்கு முன்னால் மண்டியிடாத ஒரே தலைவர் தற்போதைய ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க என்று ஹெல உறுமய அமைப்பாளர் திலக் கருணாரத்ன கூறியுள்ளார்.

முதலில் சிங்களவர்களை ஒன்றுபடுத்தி இந்நாட்டுச் சிறுபான்மை இனத்தவருக்கு அநீதி இழைக்கப்படாதவாறு முன்கொண்டு செல்வதற்கு நாம் அவருக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். -ம

## 88 மாணவர் சடலங்கள் றுவாண்டாவில் மீட்பு!

(கிகாலி)
றுவாண்டாவின் தெற்குப் பகுதியில் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் வுத்தாவி இடத்துக்கருகில் அருந்துக் கொல்லப்பட்ட 88 மாணவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக றுவாண்டாவில் தற்போது தங்கியுள்ள ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களை யார் கொன்றது என்பது பற்றி தகவல் கிடைக்கவில்லையென்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.
-ம

